சுருக்கம்

வேளாண்மைத்துறை– விதை சுத்திகரிப்பு நிலையம் (எண். TNJ. 13) பட்டுக்கோட்டை கஜா புயலினால் விதை சுத்திகரிப்பு நிலையம் பாதிப்பு – விதை சுத்திகரிப்பு நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த உளுந்து மற்றும் நெல் விதைகள் மழையில் நனைந்து– பாதிக்கப்பட்டது– இழப்பு தொகை ரூ.16,36,268.50/– ஐ தள்ளுபடி செய்து ஆணை – வழங்கப்படுகிறது.

---

வேளாண்மைத் (வே.உ.3) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2050, ஆனி மாதம் 31ஆம் நாள்

ஆணை (2ப) எண். 133 நாள்:16.07.2019

படிக்கப்பட்டது:

வேளாண்மை இயக்குநரின் கடிதம் எண்.டான்சிடா6/33546/17, நாள் 21.1.2019.

------

**ஆணை:**

வேளாண்மை இயக்குநர், பார்வையில் படிக்கப்பட்ட தமது கடிதத்தில் பட்டுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் விதை சுத்திகரிப்பு நிலையத்தின் (எண்.TNJ.13) மேற்கூரை, கடந்த 16.11.2018 அன்று வீசிய கஜா கடும் புயலினால் மிகவும் சேதமடைந்து மேற்கூரைகள் தூக்கி வீசி எறியப்பட்டது என்றும், அதனுள் சுத்திகரிப்புப் பணிக்காகவும், சான்றட்டை கட்டிய நிலையிலும் இருப்பு வைக்கப்பட்டிருந்த நெல், உளுந்து மற்றும் எள் விதைகள் மழையில் நனைந்து மிகவும் பயன்படுத்த முடியாத நிலையில் பாதிக்கப்பட்டது என்றும், அவற்றின் விவரங்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளதுடன், அதனால் ஏற்பட்டுள்ள இழப்புத் தொகை ரூ.16,36,268.50/– ஐ தள்ளுபடி செய்து அரசாணை வழங்கும்படி அரசை கேட்டுக் கொண்டுள்ளார்:–

| வ. எண். | பயிர் | ரகம் | விலை (கிலோவிற்கு) | அளவு (கிலோவிற்கு) | மொத்த மதிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | நெல் | CO(R) 51-C | ரூ.28.40 | 32730 | ரூ.9,29,532 |
| 2 | உளுந்து | VBN 6-F1 | ரூ.75.10 | 1713 | ரூ.1,28,646.30 |
| | | VBN 6-C | ரூ.70.10 | 6352 | ரூ.4,45,275.20 |
| | | ADT5-C | ரூ.70.10 | 1600 | ரூ.1,12,160 |
| 3 | எள் | TMV 3-C | ரூ.121.50 | 170 | ரூ.20,655 |
| | | | கூடுதல் | 42565 | ரூ.16,36,268.50 |

(த.பி.பா)

2. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலினை செய்து, அதனை ஏற்று, பட்டுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் விதை சுத்திகரிப்பு நிலையத்தில் (TNJ. 13) கஜா புயலினால் நெல், உளுந்து மற்றும் எள் விதைகள் மழையில் நனைந்து மிகவும் பயன்படுத்த முடியாத நிலையில் பாதிக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள இழப்புத் தொகை ரூ.16,36,268.50/–ஐ தள்ளுபடி செய்யலாம் எனக் கருதி, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.7525 / வேளாண்மை / 2019 நாள் 7.3.2019–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சென்னை–5.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை,
சென்னை–5.

<u>நகல்</u>
மாண்புமிகு துணை முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலரின் முதுநிலை தனிச் செயலர், சென்னை–9.
வேளாண்மைத் (அ.ந.3) / பொதுத் துறை, சென்னை–9.
நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
துணை நிரலர், வேளாண்மைத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 17/7/19